**அம்பன்கங்க கோரலே பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 யூன் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அம்பன்கங்க கோரலே பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஊழியர் பிணை முதலீட்டு நிதியாகிய ரூபா 53,469 ஐந்தொகையில் முதலீட்டின் கீழ் பதியப்படாது கடன்பட்டோரின் கீழ் பதியப்பட்டதன் காரணமாக அத் தொகையினால் கடன்பட்டோர் மீதி கூடுதலாகவும் முதலீட்டு மீதி குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறுபெற வேண்டிய 7 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,945,160 ஆனதுடன், சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அதில் 3 வருட காலமாக தீர்க்கப்படாத ரூபா 137,871 ஆன மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 8 கடன் கொடுத்தோர் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,636,726 ஆக இருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின் பிரகாரம் அதில் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாமல் காணப்படும் ரூபா 1,531,401 ஆன மீதிகள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளுராட்சி ஒய்வூதிய நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய ரூபா 813,670 ஆன பங்களிப்புத் தொகையொன்று காணப்பட்டதுடன் 8 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலவிய ரூபா 626,974 ஆன மீதியொன்றும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக ரூபா 3,839,413 ஆன 5 கணக்கு விடயங்களுக்கான கூட்டுத்தொகை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.3.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 197 மற்றும் 199 | ஒவ்வொரு மாத இறுதியின் போத பாவனைக்களஞ்சிய பொருட் பதிவேடு பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் செயலாளரினால் கையொப்பமிடல் மற்றும் பெறுவனவுக் குறிப்பிடப்படும் பகுதியில் ஒவ்வொரு குறிப்பும் சமர்ப்பிக்கப்படும் பெர்களுக்காக பணம் செலுத்தப்பட்டதாக உறுதிச்சீட்டு இலக்கமும் திகதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | பிரதேச சபைக்குரிய 03 வாகனங்களுக்கு எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,541,806 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 990,615 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (ை) | வீதவரி மற்றும் வரி | 13,000 | 96,600 | 90,655 | 24,590 | 160,000 | 142,400 | 123,755 | 19,045 |
| (ைை) | வாடகை | 36,000 | 298,600 | 298,600 | - | 250,000 | 245,280 | 245,280 | - |
| (ைைை) | ஏனைய வருமானம் | 471,600 | - | 2,128,520 | - | 4,374,500 | - | 2,516,498 | - |

### 2.2.1 ஏக்கர் வரி

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 47,933 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. அதில் 65 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 38,271 ஆன நிலுவை மீதியொன்றும் காணப்பட்டது

### 2.2.2 வாடகை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 31,550 ஆன நிலுவை மீதியொன்று காணப்பட்டது. குருபெபில 01 ஆம் இலக்க கடையறைக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 23,850 தொகை 2018 சனவரி 17 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீர்க் கட்டணம்

சபைக்கு சொந்தமான உத்தேச 7 நீர் திட்டங்களில் 2017 திசெம்பர் 31 இல் நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 454,748 ஆனதுடன், அதில் 26 நீர் வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 31,395 மீதி ஆக இருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 60,750 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 3,043,550 ஆக இருந்தன.

### 2.3 மிகை அறவீடு

பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்டிருந்த மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,408 மிகை அறவீடாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) கருமங்களை நிறைவேற்றுதல்**

(i) 2017 பாதீட்டு திட்டத்திற்கமைவாக அதிகாரப் பிரதேசம் முழுவதும் தேவையான இடங்களில் வீதி விளக்குகள் பொருத்துதல், பிரயாணிகளின் வசதி கருதி பேரூந்து தரிப்பிடங்களை அமைத்தல், சபைக்குச் சொந்தமான சகல மயான நிலங்கள் மற்றும் அவற்றிலுள்ள கட்டிடங்களை முறைப்படுத்தல் மற்றும் குடிநீர் வசதிகளை மேம்படுத்தல் ஆகிய கருமங்களை நிறைவேற்றி பிரதேச மக்களின் பொது வசதிகளை முன்னேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அக்கருமங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்திற்கமைவாக பிரதேசத்தினுள் மேற்கொள்ளப்பட வேண்டியவையென இனங்காணப்பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 15,000,000 மற்றும் ரூபா. 7,200,000 ஆன 11 வீதிகள் மற்றும் 4 கட்டிடங்களின் அபிவிருத்தி வேலைகள் மீளாய்வாண்டினுள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்த்த நிறைவு மட்டத்தினை அடையாமை**

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பிரதேச சபைகளை வலுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் கலுகங்கை நீர்ப்பாசனத் திட்டத்தினை அண்மித்து ஒரு கிணற்றினை நிர்மாணித்து 5 பிரிவுகளுக்கு நீரை வழங்கும் திட்டத்தின் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்வதற்கு ரூபா. 23,161,262 நிதி 2017 செப்டம்பர் 11 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு 2017 திசெம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் தாமதமாகி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக திட்டத்தினை நிறைவு செய்வதற்கான கால அவகாசம் போதாமையினால் செயற்படுத்த முடியாமல் போயிருந்தது.
மேலும் மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி வழங்கல் மக்கள் நீர்ப்பாசனத திட்ட ஒதுக்கீட்டின் கீழ் ரூபா. 1,689,451 செலவிடப்பட்டு 2016 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இத்திட்டத்தில் கிணறு மற்றும் பாய்ச்சல் அறை ஒரு வருடத்திற்கும் மேலாக விளைவற்றுக் காணப்பட்டன.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சிநிரல் தொடர்பாக சபை முறையாக அறிந்திராமையால் அந்நோக்கங்களுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தின் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத்திட்டம் 2018 யூன் 8 ஆந் திகதி வரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை தனது அதிகாரப் பிரதேசத்தினுள் பொது சுகாதாரத்தினை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாக்கும் பொது நிர்வாக அதிகாரசபையாக செயற்பட வேண்டியிருந்த போதும் 2002 வருடம் முதல் 2017 வருடம் வரையிலான காலப்பகுதியினுள் ஆரம்பிக்கப்பட்ட 550 நலனாளிக் குடும்பங்களுக்கான நீரை விநியோகம் செய்கின்ற 8 நீர் செயற்திட்டங்களின் நீரின் தரம் தொடர்பாக முறையாக நீர் மாதிரிகள் ஒருபோதும் பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறுதிக் கணக்குடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வைப்புக்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 2009 மற்றும் 2010 ஆண்டுகளிலிருந்து காணப்பட்டு வருகின்ற ரூபா 311,833 பெறுமதியான 11 வைப்பு மீதிகள் மீதான விபரங்கள் இனங்காணப்பட்டு தீர்த்து வைக்கப்படுவதற்கான அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமை

பிரதேச சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட 08 பதவிகளுக்கான 12 வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிலவியதால் நிறைவேற்றப்பட வேண்டிய பொதுச் சேவைகள் மட்டுப்படுத்துவதற்கு காரணமாக இருந்தது.சபையனிக் வேலைகளுக்கு இடையூராக அமைந்திருந்தது.

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 ஆம் வருடத்தினுள் சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் காணப்படுகின்ற சகல வியாபாரங்கள் தொடர்பிலான முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு ஆவணப்படுத்தப்படாது வியாபார அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவங்கள் மாத்திரம் ஆவணப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2016 ஆம் ஆண்டில் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றிருந்த 15 வியாபாரங்கள் 2017 ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரங்களைப் பெறாதிருந்ததுடன் அவ்வியாபாரங்கள் மூடப்பட்டு விட்டனவா, அனுமதிப்பத்திரம் பெறாது வியாபாரங்களை நடாத்திச் செல்கின்றனரா என இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

சபையினால் 2016 ஆம் ஆண்டில மேற்கொள்ளப்பட்டிருந்த சொத்துக்கள் மெய்மையாய்வின் பிரகாரம் 4 இடுகாடுகள் தொடர்பான தகவல்கள் இனங்காண முடியாதிருந்ததுடன் இனங்காணப்பட்ட மயானங்களின் சரியான எல்லை இல்லாமை மற்றும் அளவீட்டு நடவடிக்கைககள் மேற்கொண்டு திட்டவரைபடம் தயாரிக்கப்படாமையால் குறிப்பான காணி அளவொன்றை இனங்காண முடியாதிருந்தது.

### 3.5.2 சொத்துக்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்படாமை

சபைக்குச் சொந்தமான வீதிகள் இறுதியாக 1996 மார்ச் 22 ஆந் திகதியே வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்ததுடன், வீதிப்பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.5.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

பிரதேச சபையினால் நீண்ட காலமாக உபயோகித்துக்கொண்டிருக்கும் 5 வண்டிகளின் உரித்தை சுவீகரித்து பிரதேச சபையின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமாக காணப்படும் மின்பிறப்பாக்கியொன்றும் 6 வாகனங்களும் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) புறநெகும மாநாட்டு மண்டபம் 2017 ஆம் ஆண்டின் போது ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டு ரூபா 3,000 மாத்திரம் வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டு பூராகவும் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.

(இ) சபைக்குச் சொந்தமான 2 கடைகள் 2016 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டிருந்தன.

## 3.8 பெறுகை செயற்பாடு

### 3.8.1 பெறுகை திட்டம்

அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 இன் பிரகாரம் பிரதான பெறுகை திட்டமொன்று, சிவில் வேலைகள், பொருட்கள் மற்றும் ஏனைய சேவைகள் உள்ளடக்கப்பட்ட விரிவான பெறுகை திட்டமொன்று மற்றும் பெறுகை கால அட்டவணையொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) 9 வருமான விடயங்களுக்குரிய ரூபா 67,000 ஆன மதிப்பிடப்பட்ட வருமானம் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 10 வருமான விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானங்களுக்கு இடையில் விலகல் 30 சதவீதம் முதல் 98 சதவீதத்திற்கு இடைப்பட்டதாக காணப்பட்டன.

(இ) 16 செலவின விடயங்களுக்காக ரூபா 400,000 ஆன நிதிஏற்பாடுகளிலிருந்து எவ்வித செலவினமொன்று செய்யப்படாமல் முழு நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ஈ) 21 செலவின விடயங்களுக்கு பாதிடப்பட்ட தொகையில் வேறு விடயங்களுக்கு மாற்றங்கள் செய்யப்பட்டதன் பின்னர் தேறிய நிதிஏற்பாடுகளில் 33 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2014 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய சீபீசீ/சீஎல்ஜீ/1/9/1/4 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் சபையின் பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக ஆக்கபூர்வமான முறையில் அக்குழுத் தீர்மானங்கள் அமுல்படுத்தப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | | முறைமையின் குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) மனிதவள முகாமைத்துவம். | | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படல் |
| (ஆ) சொத்துக்கள் | (i) | சொத்துக்கள் குறைப்பயன்பாடுடனும் விளைவற்றுக் காணப்பட்டமை. |
| | (ii) | சொத்துக்களின் உரித்தினை உறுதிப்படுத்தாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை |
| | (ii) | வருமான இலக்கை பூர்த்தி செய்யாமை |